# 8

# கதவுக்கு அப்பால் செல்லுதல்

நாம் தேவனை அணுகுதல் என்பது கொண்டாட்டத்தில் நடைபெற வேண்டுமா அல்லது மனத்தெளிவுடன் நடைபெற வேண்டுமா? ஆராதிக்கும் குறிப்பிட்ட ஜனக்கூட்டம் அல்லது சபைக்கூட்டத்தின் குறிப்பிட்ட ஒரு பிரிவு என்பதைப் பொறுத்து, இவற்றில் ஏதாவது ஒன்று அல்லது இவ்விரண்டுமே சரியானதாக இருக்கலாம். ஏற்புடைய உணர்வு அல்லது வடிவமைவு ஏதாவது தேர்ந்துகொள்ளப்படலாம், ஆனால் அது தேவனைத் துதித்தல் மற்றும் ஆராதித்தல் ஆகியவற்றிற்கு உண்மையான பதில்செயலாக இருக்க வேண்டும். உடல்ரீதியான எந்த செய்கையும் தன்னில்தானே ஆராதனையாக இருப்பதில்லை. ஆராதனை என்பது இருதயத்தின் நடவடிக்கையாக உள்ளது. ஆராதனையில் செய்கை என்பது எப்போதுமே தேவனுக்கு உண்மையான பதில்செயலின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். ஒருவர் எதைச் செய்தாலும், ஆராதனைக்கு உணர்வுப் பூர்வமான விருப்பம் இல்லையென்றால், அது ஆராதனையாக இருப்ப தில்லை. உடல் சரியான இடத்தில் இருக்கலாம், சரியான எல்லா விஷயங் களையும் செய்யலாம், ஆனால் இருதயம் அங்கில்லை என்றால் ஆராதனை நடைபெறுவதில்லை.

ஆராதனைக்கு வரும் ஒரு நபர், சபைகூடி வரும் பகுதியின் நுழைவாயிலில் நின்று, ஆராதனை நேரம் முழுவதிலும் அங்கேயே அவர் இருத்தல் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? சிலவேளைகளில் இதை நாம் நமது சிந்தையிலும் இருதயத்திலும் செய்கிறோம். நமது உடல்கள் சபைக்கூட்டத்தில் உள்ளன, ஆனால் நமது சிந்தைகள் வேறு ஏதோ ஓரிடத்தில் உள்ளன. நாம் வெறுமனே உணர்வுகளினூடே கடந்து சென்று, பாடல்களின் வார்த்தைகளுக்குக் கவனம் கொடுக்காது அவற்றைப் பாடி, ஜெபங்களின்போது நமது சிந்தைகளை அலையவிட்டு, நமது அற்பமான காணிக்கைகளைக் கொடுத்து, ஆராதனை எப்போது முடியும் என்று ஆவலுடன் காத்திருந்து, நமது வாழ்விற்குத் திரும்புகிறோம். இது ஒருவர் தேவனை அணுகுவதற்கான வழியாக இருக்கும் என்றால், அவரது இருதயம் கதவைக் கடந்து செல்வது இல்லை.

இன்னொரு மிகைமுனையில், களிப்புடன் கூடிவருகிறவர்கள் ஆராதனையை விரும்புவதால் மட்டும் அவ்வாறு கூடிவருகின்றவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் முன்னதாகவே வந்து சேருகின்றனர், விட்டுச் செல்வதற்குத் துரிதப்படுவதில்லை. நல்ல பொழுதைப் பெறுதல் என்பது அவர்கள் அங்கிருப்பதற்குக் காரணமாகும், அவ்வாறே அவர்கள் நல்ல பொழுதைப் பெறுகின்றனர். அவர்கள் மக்களுடன் இருப்பதை, சென்று பார்ப்பதை, மற்றும் பிறருடைய வாழ்வில் நடப்பது என்ன என்பதைப்

பற்றிக்கொள்வதை மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர். சிலர் தாங்கள் மிகச்சிறப்பாகப் பாடியதை வலியுறுத்துவதற்காக மகிழ்ச்சிக் களிப்புடன் பாடல்களை நான்கு-பாக ஒத்திசைவுடன் பாடுகின்றனர். அவர்கள் [பாடல்களின்] வார்த்தைகளுடைய செய்திக்குச் சிறிதளவே கவனம் செலுத்தலாம், ஆனால் மெட்டில் அவர்கள் மனம் களிக்கின்றனர். இவ்விதமான ஆராதனையாளர்களின் இருதயங்களும் கதவருகே நிலைத் திருக்கலாம் - அல்லது குறைந்தபட்சம் அவர்கள் தேவனுடைய பிரசன்னத் திற்குள் ஒருக்காலும் வராதிருக்கலாம்.

## ஆராதனையை விரும்புவதன்மூலம்

ஆராதனை ஊழியத்தை நாம் விரும்புவதால் மாத்திரம் அதில் பங்கேற்றோம் என்றால், நோக்கம் என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது. ஆராதனையில் நல்ல பொழுதைக் கொண்டிருத்தலுக்கு நான் எதிரானவன் அல்ல. ஆராதிப்பவர் மகிழ்வுடன் அனுபவிக்கும் வகையிலும் அவருக்குப் பயனுள்ளதாக இருக்கும் வகையிலுமே தேவன் ஆராதனையை வடிவமைத்தார். இருப்பினும், நல்ல பொழுதைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டும் ஆராதிக்கக் கூடிவருபவர் ஆராதனையைத் தவற விடலாம். தேவனை ஆராதித்தல் என்ற நோக்கத்திற்காகக் கூடிவருபவர் நல்ல பொழுதையும் பெறலாம், ஆனால் அவர் ஆராதனையின் உண்மை யான நோக்கத்தைத் தவறவிடுவதில்லை என்றே கூறலாம். மற்ற மக்களுடன் விசேஷமாக, ஒரேவகையிலான விசுவாசம் கொண்ட மக்களுடன் இணைந்திருக்க விரும்புதல் தவறல்ல; ஆனால் ஆராதனையில் தேவன் நாம் அவருடன் இருக்க வேண்டும் என்று விரும்புவதிலேயே களிப்படைகிறார். ஆராதனை என்பது தற்செயலாக நடைபெறுவதில்லை. ஒன்றிணைந்த ஆராதனை என்ற விஷயமானது, தேவனை ஆராதித்தல் என்ற நோக்கத்தை வெளிப்படுத்த ஒரு குழு கூடிவரும்போதுதான் நடைபெறுகிறது. அதே நோக்கம் கொண்ட மற்றவர்களுடன் ஆராதித்தல் என்பது நம்மைத் தேவனுடைய பிரசன்னத்திற்குள் தரவழைக்க உதவுகிறது. ஆராதிப்பவர் ஒவ்வொருவரும், தேவனை அணுகுதல் மற்றும் அதைச் செய்யப் பிறருக்கு உதவுதல் என்ற உணர்வுப்பூர்வமான விருப்பத்துடன் வரவேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஒரு பெரிய சபைக்குழுமத்தில் எனது உறவினர்கள் சிலருடன் ஆராதனை ஊழியத்தில் கலந்து கொண்டேன். நாங்கள் சபைக் கட்டிடத்தின் இருக்கைகளில் பாதிவரை முன்சென்று, நாங்கள் நால்வரும் அமர இடத்தைக் கண்டறிந்து, இன்னும் வருபவர் களுக்கு இடம் இருக்கும்படி, இடம்விட்டு அங்கே அமர்ந்தோம். நன்கு-உடையணிந்த ஒரு இளம்பெண் உள்ளே வந்து எனக்கு அடுத்திருந்த இருக்கையில் அமர்ந்தபோது பாடல் தொடங்கியிருந்தது. உதவிசெய்யும் வகையில், நான் சரியான பக்கம் விரித்து வைக்கப்பட்டு எனது கையில் இருந்த பாடல் புத்தகத்தை, அப்பெண்ணுக்குக் கையளித்துவிட்டு, வேறொரு பாடல் புத்தகத்தை எனக்காக எடுத்துக்கொண்டேன்.

கர்த்தருடைய இராப்போஜனத்தின்போது, அப்பெண்மணி தனது கைப்பையில் இருந்த பொருட்களை அலசத் தொடங்கினாள். கடைசியாக

அவள் காசோலைப் புத்தகத்தை உருவி தனது காணிக்கையைக் காசோலையில் எழுதலானாள். பின்பு பிரசங்கித்தலுக்கான வேளை வந்தது. பேசுபவர் ஆர்வத்திற்குரிய சில விஷயங்களைக் கூறிக்கொண்டிருந்தார், நான் அதைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தேன், அப்போது எனக்கு அடுத்து அமர்ந்திருந்த பெண்மணி தனது கைப்பையை மீண்டும் அலசத் தொடங்கினாள். அவள் எழுதுவதற்கு ஏதேனும் அகப்படுமா என்று பார்த்துக்கொண்டிருக்கலாம் என்பதாக நான் நினைத்தேன். மீண்டுமாக, உதவி செய்யும் நோக்கத்தில், நான் அவருக்குக் குறிப்பெழுதும் அட்டை ஒன்றைக் கையளித்தேன். அவள் புன்முறுவல் பூத்து தனது தலையை அசைத்தாள். சற்று நேரத்தில் அவள் ஒரு சிறு கணக்கிடும் கருவியை வெளியே எடுத்தாள். அவள் பேசுபவரைக் கவனித்ததாகக் காணப் பட்டாள். அவர் ஒரு நல்ல கருத்தை வெளியிடும்போது அவள் அதை ஒப்புக்கொள்ளும் வகையில் தலையசைக்கவும் செய்தாள், ஆனால் அந்த வேளையை அவள் தனது வங்கியில் எவ்வளவு பணம் எஞ்சியுள்ளது என்று கணக்கிடுவதற்குப் பயன்படுத்தினாள்.

பின்பு, பேச்சாளர் தமது உரையை முடிப்பதற்கு முன்னர், அவள் தனது நகங்களை இராவுவதற்கும் எல்லாப் பொருட்களையும் தனது கைப்பைக்குள் திரும்பவும் வைப்பதற்கும்கூட நேரம் கொண்டிருந்தாள். அவள் ஆராதிக்கவில்லை என்று நான் யூகித்தால் அதில் நான் தவறானவனாக இருக்கலாம், ஆனால் நான் ஆராதிப்பதற்கு உற்சாகமூட்டும் வகையில் அவள் ஏதொன்றையும் எனக்குச் செய்யவில்லை என்பதை நான் அறிவேன். அவள் தனது இருதயத்தை வாசற்கதவருகே வைத்துவிட்டு, வேறு எங்காவது இருப்பதை, வேறு எதையாவது செய்து கொண்டிருப்பதைத் தேர்ந்து கொண்டிருந்தாளா என்று வியப்படைவதைவிட வேறு எந்த உதவியும் செய்ய முடியாதவனாய் இருந்தேன்.

## மாம்சத்தின்மீதல்ல மாறாக ஆவியின்மீது கவனம் குவித்தலினால்

மிகவும் அடிக்கடி, உடலானது [ஆராதனை செய்யும் இடத்தில்] இருக்கிறது, ஆனால் இருதயம் இல்லத்தில் தங்கியிருக்கிறது அல்லது உடல் தேவைகள் மற்றும் முன்னுரிமைகள்மீது கவனம் குவித்துள்ளது. உடல் மிகவும் வெப்பமாக இருப்பதாக அல்லது மிகவும் களைப்பாக இருப்பதாக, அல்லது ஆராதனை ஊழியம் மிகவும் நீண்டதாக இருப்பதாக முறையிடலாம். உடலானது உடலுக்குரிய உணவுக்காக ஏங்குகிற வேளையில், ஆவியானது ஆவிக்குரிய உணவுக்காக ஏங்குகிறது. உடல், ஆத்துமா, மற்றும் ஆவி ஆகியவை கருத்தொருமிப்பில், ஒன்றியிருக்க வேண்டும்; இவை மூன்றும் ஆராதனை செயல்முறையில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

வேதவசனங்கள் சிலவேளைகளில், மனிதனின் ஆவியை "உள்ளான மனுஷன்" என்றும் இயல்பான இவ்வுடலை "புறம்பான மனுஷன்" என்றும் குறிப்பிடுகிறது. புறம்பான மனுஷன் நாளுக்குநாள் அழிந்து கொண்டிருக் கையில் உள்ளான மனுஷன் "நாளுக்குநாள் புதிதாக்கப்படுவதாக"

கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் கூறினார் (2 கொரிந்தியர் 4:16). மேலும் அவர் ரோமருக்கு எழுதிய நிருபத்தில், உள்ளான மனிதனுக்கும் புறம்பான மனிதனுக்கும் இடையில் நிகழும் போராட்டங்கள் பற்றியும் விளக்கினார் (ரோமர் 7:22, 23). இயேசு தமது சீஷர்களிடத்தில் “ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது” என்று கூறினார் (மத்தேயு 26:41ஆ).

இந்தப் போராட்டம் நமது ஆராதனையை அடிக்கடி பாதிக்கிறது. தேவனுடைய பிரசன்னத்திற்குள் வர வேண்டும் என்ற உள்ளான மனிதனுடைய விருப்பம், மாம்சத்தை வெற்றிகொள்ள வேண்டும், ஏனெனில் சர்வ வல்லவரின் அரியணை அறையில் மாம்ச இச்சைகளுக்கு இடமில்லை. ஒரு நபரின் உடலானது ஆராதனையின் செயல்பாடுகளில் ஈடுபடுகிறது; ஆனால் இருதயம் என்ற அந்த நபரின் ஆவிதான், உண்மையான ஆராதனையில் தேவனுடைய ஆவியுடன் இணைகிறது. சிந்தையில் விரோதமும், கசப்பும், மற்றும் கலகமும் நிறைந்து இருக்கையிலும்கூட, குரலானது பாடக்கூடும். புறம்பான மற்றும் உள்ளான மனிதர்கள் தேவனுடைய அரியணையை அணுகும் விருப்பத்தில் ஒன்றிணைக்கப்படும் வரையில் ஆராதனை என்பது [அந்த நபரைப் பொறுத்தவரையில்] நடப்பதில்லை.

மாம்சத்தைப் புறக்கணித்தல் என்பது கடினமானது. நாம் நமது தனிப்பட்ட முன்னுரிமைகளை “தேவைகள்” என்று கண்ணோக்கச் சாய்கிறோம். இந்தத் “தேவைகள்” சந்திக்கப்பட வேண்டும் என்ற நமது வற்புறுத்துதல், மற்றவர்களுக்கு ஆராதனை அனுபவத்தைப் பாழாக்கி நமக்கும் ஆராதனையைத் தவறவிடக் காரணமாகலாம். ஆராதனைக் கென்று இருதயத்தைத் தயார் செய்தல் என்பது சபைகூடுகையில் வந்து சேர்வதற்கு மிகவும் முன்னதாகவே தொடங்க வேண்டும். அது மற்றவர்களுக்குப் பக்திவிருத்தியூட்டுதல் மற்றும் தேவனைப் பிரியப் படுத்துதல் ஆகியவற்றில் மட்டுமே ஈடுபட ஒரு திடமான தீர் மானத்தை உள்ளடக்கி இருக்கிறது. நாம் கதவருகே எதையாவது விட்டுச்செல்கிறோம் என்றால், நாம் உலகத்தையும் அதனால் உணரப்பட்ட சரீரத்தேவைகளையும் விட்டுச் செல்லவேண்டும். நாம் ஆவியில் தேவனை அணுக வேண்டும்.

## முயற்சி செய்வதினால்

இன்னொரு கருத்தில் நாம் நமது ஆராதனையில் கதவுக்கு அப்பால் ஒருபோதும் செல்லாதவர்களாக இருக்கலாம். நாம் நமது இருதயங்களை ஆராதனைக்குக் கொண்டு வந்தாலும், உண்மையான ஆராதனைக்குக் கதவினூடே கடந்து செல்ல நாம் மாபெரும் முயற்சி செய்ய வேண்டிய திருக்கும். நாம் “ஆவியோடும் விண்ணப்பம் பண்ணி, கருத்தோடும் விண்ணப்பம் பண்ணி” மற்றும் “ஆவியோடும் பாடி, கருத்தோடும் பாடி” இருக்கக் கூடும் (1 கொரிந்தியர் 14:15), இருப்பினும் உண்மை யான ஆராதனைக்குள் ஒருக்காலும் பிரவேசிக்காமல் இருக்கக் கூடும். நாம் உண்மையான ஜெபத்தில் ஈடுபட்டு, தூய்மையான துதியில் நமது குரல்களை உயர்த்தியிருந்தும் ஆராதனையின் ஆழத்தை அனுபவிக்காமல்

இருக்கக் கூடும்.

ஆராதனையின் நடவடிக்கைகளில் பங்கேற்றல் என்பது, நாம் ஆராதித்து இருக்கிறோம் என்பதை உத்தரவாதப்படுத்துவதில்லை. ஜெபமும், துதியும் (வழக்கமாகப் பாடுதலும்), கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்றலும், வேதவசனங்களை வாசிப்பதும், போதித்தலும் அல்லது பிரசங்கித்தலும், மற்றும் கொடுத்தலும் ஆகிய இவை யாவும்கூட ஆராதனையின் வெளிக்குறிப்புகளாக உள்ளன. ஆராதனைக்கென்று தேவனால்-நியமிக்கப்பட்ட இந்த வழிமுறைகள் ஒவ்வொன்றும் நம்மை, உண்மையான ஆராதனை நடைபெறும் இடமாகிய தேவனுடைய பிரசன்னத்திற்குள் நடத்திச்செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. நமது இருதயங்கள் ஆராதனையின் கலையில் பயிற்றுவிக்கப்பட்டு வளமூட்டப்பட்டிருந்தால், இந்தப் பல்வேறு வழிகளில் ஏதேனும் ஒன்று நம்மைத் தேவனுடைய பிரசன்னத்திற்குள் வழிநடத்திச் செல்லலாம். இதற்கு மறுபுறத்தில், நாம் தேவனுடைய பிரசன்னத்திற்குள் வருவதற்குச் சிந்தையின்றி இருந்தால், ஆராதனையின் இந்த வழிமுறைகள் யாவும் ஒன்றிணைந்துகூட நாம் உண்மையான ஆராதனைக்குள் பிரவேசிக்க உதவாமல் போகலாம்.

துதி, பிரசங்கித்தல், மற்றும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றல் ஆகியவற்றை முழுமையாக மகிழ்வுடன் அனுபவிக்க முடிந்திருந்தும், ஒருக்காலும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்காதிருக்கலாம். ஆராதனை என்றால் என்ன என்பதை நாம் உண்மையில் புரிந்துகொண்டவுடன், நாம் பயணம் மற்றும் அடைவிடம் ஆகியவற்றில் உள்ள வேறுபாட்டை உணர்ந்தறிவோம். ஆராதனையின் வழிமுறைகளால் வாய்ப்பு ஏற்படுத்தப்படுவது பயணமாகும். தேவனுடைய சிங்காசனமே அடைவிடமாகும். அங்கு சென்றவுடன், நாம் அவரது பரிசுத்த பிரசன்னத்தையும் அவரது தூய்மையான ஒளியின் கதிர்களில் கதகதப்பை அடைவதையும் மாத்திரம் விரும்புகிறோம். நமது இருதயங்கள் பொங்கிவழியும் அன்பினாலும் பாராட்டுதலினாலும் அவரிடத்திற்குத் தரவழைக்கப்படுகின்றன. நன்றி செலுத்துதல் மற்றும் பாராட்டுதல் என்பவற்றிற்கான நமது உணர்வுகளை வெளிப்படுத்த எந்த வார்த்தைகளும் போதுமானவைகளாக இருப்பதில்லை. தேவனுடைய அரியணை அறையான இங்கு, நமது ஆவிகள் தேவனுடைய ஆவியுடன் ஒன்றித்து அவருடன் உறவாடுகின்றன.

தேவன் ஆராதனையை, நாம் அவரிடத்தில் தரவழைக்கப்படும்படியாகவும் நமது வாழ்வில் அவரது நோக்கங்களை நிறைவேற்ற அவரால் பலப்படுத்தப்படும்படியாகவும் வடிவமைத்தார். அவர் தேடுபவராக இருக்கிறார்: மனித வரலாற்றில் தேவனுடைய ஒவ்வொரு செயலும், அவர் தமது சாயலில் படைத்த மனிதனைத் தேடுவதாகவும், மனிதனைத் தம்முடன் ஒன்றிணைத்துக் கொள்வதாகவும் இருந்துள்ளது. தேவன் நம்முடன் ஐக்கியத்தை விரும்புகிறார். அவர் படைப்பில் இருந்து சிலுவை வரையில் நம்மைத் தேடித் தொடர்ந்திருக்கிறார். பொங்கியெழுந்த செங்கடலின் தண்ணீர்களில் இருந்து வெறுமையான கல்லறை வரையிலும்,

நமது தேவன் நம்மைத் திரும்ப மீட்டு நமக்கு நித்தியஜீவனைக் கொடுப்பதற்குத் தம் வல்லமையைச் செயல்விளக்கப்படுத்தியுள்ளார். ஆபிரகாமை அழைத்ததில் இருந்து கிறிஸ்து பரத்துக்கேறுதல் வரையிலும் காலங்கள் தோறும் அவரது வாக்குத்தத்தங்கள் ஒலித்துள்ளன. நம்முடன் தேவன் கொண்டுள்ள ஐக்கியத்தில், தேவன் இருக்கிறார் என்பதை அரிதாகவே ஒப்புக்கொள்கிற உலகத்திற்கு அவரது வல்லமை சென்றடையும் வாய்க்கால்களாக நாம் இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். ஆராதனை என்ற ஒன்று மாத்திரமே இந்த வல்லமையைச் சென்று அடையும் வழியாக உள்ளது. நமது ஆராதனையின்மூலம், அவரது ஆவிக்குரிய சக்தியானது நமக்குள் சேர்த்து வைக்கப்படுகிறது. அவரது பிரசன்னத்திற்குள் இருந்தபின்பு நாம் உலகத்திற்குள் திரும்பிச் செல்லுகையில், நாம் அந்த சக்தியை மற்றவர்களுக்கு ஒளிவீசச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

## முடிவுரை

ஆராதனையின் மூலமாகத் தேவனுடன் உறவாடியுள்ளவர்கள், தாங்கள் தேவனுடைய அரியணை முன்பாக இருந்துள்ளதை அறிந்தவர்களாக சபைகூடுகையை விட்டு வெளிச்செல்லுவார்கள். தேவனுடைய பலப்படுத்தும், வாசம்பண்ணும் பிரசன்னம் அவர்கள் தங்கள் அன்றாட வேலைகளுக்குத் திரும்புகையில் அவர்களுடன் செல்லுகிறது. தேவன் அவர்களுக்குள் வாசம்பண்ணுவதால் (1 கொரிந்தியர் 3:16; 6:19) மற்றும் அவர், அவர்களின் வாழ்வின் மையமாகவும் கவனம் செலுத்தும் இடமாகவும் இருப்பதால், அவர்கள் மாறுபட்டவர்களாக இருக்கின்றனர். அவர்கள் ஆவிக்குரிய போஷிப்பை எடுத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் தேவனுடன் நடக்கவும் அவருக்காக ஊழியம் செய்யவும் ஏற்ற விஷயங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர். அவர்கள் தாங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காகத் தேவன் படைத்தாரோ, அவ்வாறே ஆகியுள்ளனர்.